தமிழக சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1968 மார்ச் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **திரு. சி. பா. ஆதித்தனர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாயூரம் ரயில் நிலையத்தருகே மேம்பாலம்

•130 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், மாயூரம் புகைவண்டி சந்திப்பு நிலையத்திற்குத் தெற்கேயுள்ள ரயில்வே கேட்டிற்கு அருகில் மேம்பாலம் அமைக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில் அது பற்றி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) and (இ) ஆம். இத்திட்டம், நான்காம் ஐந்தாண்டுத் திட்டச் செயற் குறிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளது. முறைவைப்பு வரிசைப்படியும் நிதி வசதி கிடைப்பதற்குட்பட்டும் இப்பணி மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். முருகையன் : தேசிய நெடுஞ்சாலைகளில் எத்தனை மேம்பாலங்களுக்கும், எத்தனை சுரங்கப் பாதைகளுக்கும் தமிழக அரசு பரிந்துரை வழங்கியது ? எத்தனை சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது ? எத்தனை சாலைகளில் வேலைகள் நடந்துக்கொண்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்கு பின்வரும் 7 திட்டங்களுக்கு பரிந்துரை வழங்கியிருக்கிறது:—

(1) மதுரை சுப்பிரமணியபுரம் அருகே திருப்பரங்குன்றம் சாலையில் 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் 300/2 மைல் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல் ரூ. 15 லட்சம்.

(2) மதுரை மீனாட்சி ஆலை அருகே திருப்பரங்குன்றம் சாலையில் 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் 300/7 மைலில் மேம்பாலம் ஒன்று கட்டுதல், ரூ. 14 லட்சம்.

(3) பாலக்கரை அருகே 45-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் 197/6 மைலில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல் (திருச்சிராப்பள்ளி நகராட்சி எல்லைகள்) ரூ. 10 லட்சம்.

(4) கோயம்புத்தூர் நகராட்சி எல்லைக்குள் 47-ம் எண் தேசிய நெடுஞ் சாலையில் 825/7 மைலில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல், ரூ. 21 லட்சம்.

(5) விழுப்புரம் நகராட்சி எல்லைகளுக்குள் 45-வது எண் தேசிய நெடுஞ் சாலையில் 98/6 மைலில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல், ரூ. 10 லட்சம்.

(6) செங்கற்பட்டு நகராட்சி எல்லைக்குள் 45-ம் எண் தேசிய நெடுஞ் சாலையில் 34/3 மைலில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல், ரூ. 10 லட்சம்.

(7) மதுரை நகராட்சி எல்லைக்குள் தத்தனேரி சாலையில் 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் 296/9 மைலில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல், ரூ. 8 லட்சம்.

ஆக, இவற்றிற்கு மொத்தம் 88 லட்சம் ரூபாய் செலவில் 7 திட்டங்கள் போடப்பட்டு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. சாங்ஷன் செய்யப்பட்ட திட்டங்கள் என்ற அளவில் (1) திருநெல்வேலி ஜங்ஷனில் மேம்பாலத்திற்கு ரூ. 35 லட்சமும், (2) தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி திருவரும்பூருக்கு அருகில் மேம்பாலத்திற்கு ரூ. 9 லட்சமும், (3) தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி சாலை—அரியமங்கலத்திற்கு அருகில் ஒரு மேம்பாலத்திற்கு ரூ. 8 லட்சமும், ஆனால் இதில் மத்திய அரசும் மாநில அரசும் ரயில்வே செலவை எந்த விகிதத்தில் ஒத்துக்கொள்வது என்பது பற்றிய பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பேச்சுவார்த்தைகள் முடிந்த பிறகு வேலை திட்டங்கள் போடப்படும். (4) சேலம் மார்கெட் ரயில்வே ஸ்டேஷனில் மேம்பாலத்திற்கு ரூ. 8·25 லட்சமும், (5) தாம்பரம் ரயில்வே ஸ்டேஷன் மேம்பாலத்திற்கு ரூ. 13·51 லட்சமும், மதிப்பீடு செய் ப்பட்டு சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசு இதற்கு பணம் ஒதுக்கவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, மேம்பாலங்கள் போடுவதிலே, மதுரை சுப்ரமணியபுரத்திலும், மீனாட்சி ஆலைக்கு அருகிலேயும் மேம்பாலங்கள் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அது இன்னும் சாங்ஷன் செய்யப்படவில்லை, இது முக்கியமான பிரச்சினை. அரை மணி நேரம், ஒரு மணி நேரம் அங்கு காத்துக் கொண்டிருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. அமைச்சர் திரு. மாதவன் அவர்களே அங்கு அரை மணி நேரம் நின்றிருக்கிறார்கள். இதைப் போக்குவதற்கு இந்தப் பாலத்தை சீக்கிரம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நானே அந்தத் தொல்லையை அனுபவித்திருக்கிறேன். இருந்தாலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மத்திய அரசிடமிருந்து அனுமதி வரவில்லை. இதைப்பற்றி மேலும், மேலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

திரு. ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, இந்த ரயில்வே மேம்பாலங்களைக் கட்டுவதற்கு ஆகின்ற செலவை மத்திய அரசுதான் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நமது அரசு கேட்டுக்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில் நான்கு வகை இருக்கிறது.

(1) புகைவண்டிப் போக்குவரத்து அதிகாரித்தமையாலேயே மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை கட்டுவதற்கு அவசியமேற்பட்டிருந்தால் ரயில்வே எல்லைக்குள் அமைந்த கட்டமைப்பின் செலவை ரயில்வே அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே தற்போதைய கொள்கையாகும். (2) ஆயினும், சாலைப் போக்குவரத்து அதிகரிப்பால் மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை கட்டுவதற்கு அவசியமேற்பட்டிருந்தால் அச் செலவை சம்பந்தப்பட்ட சாலை அதிகார சபை அதாவது மாநில அரசாங்கம் அல்லது உள்ளாட்சி நிறுவனம் ஏற்றுக்கொள்ளவேண்டும். (3) இரண்டு நேர்வுகளினும் ரயில்வே எல்லைகளுக்கு அப்பால் அணுகு சாலைகளை அமைக்கும் செலவை சாலை அதிகார சபையே முழுவதும் ஏற்றுக்கொள்ள வேண்டும். (4) நகராட்சி எல்லைகளுக்கு வெளியே, தேசிய நெடுஞ்சாலைகளில் மேம்பாலம் சுரங்கப்பாதை கட்டுவது சம்பந்தமாக, முழுச் செலவையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இந்தக் கொள்கை அளவிலேதான் நடைமுறை இருந்துவருகிறது.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மதுரை சுப்பிரமணியபுரத்தில் நானும் அந்தக் கஷ்டத்தை அனுபவித்தேன் என்று சொன்னார்கள். இந்தப்

பாலம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படவில்லை. இதற்காகப் பணம் முனிசிபாலிடியிலிருந்தும் ரெயில்வேயிலிருந்தும் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசாங்கம்தான் அனுமதி கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்லுகிறார்கள். அதைப் பற்றிய விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சுப்பிரமணியபுரத்திலும், மற்றுமுள்ள இடங்களிலும் மேம்பாலங்கள் கட்டுவதுபற்றிய எழுப்பப்பட்ட கேள்விகள் மத்திய அரசின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து கொள்வதற்கு உதவிகரமாக இருக்குமென்ற அளவில் நான் இதை வரவேற்கிறேன். தமிழகத்தில் மாநில அரசு தயாராய் இல்லை என்ற நிலைமை இல்லை. மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைத்ததும் இந்தத் திட்டவேலைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. முனு ஆதி : தாம்பரத்தில் மேம்பாலம் கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்து, மதிப்பீடு செய்யப்பட்டு, வேலைகளைத் துவங்க மத்திய சர்க்காரிடமிருந்து அனுமதி வேண்டுமென்று சொன்னபோது தேசிய நெருக்கடி என்று தள்ளிப்போட்டிருக்கிறார்கள். ஆகையால் அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு நம்முடைய சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் மற்ற வேலைகள் முடிவடைந்துவிட்டன. இதற்காக 13 லட்சத்தி 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் மத்திய அரசிடமிருந்து பணம் ஒதுக்கப்படவில்லை. காரணம் குறிப்பிடப்படவில்லை. விரைவிலே ஒதுக்கப்படும் என்று நம்புகிறோம்.

திரு. என். சங்கரய்யா : சுப்பிரமணியபுரத்திலும், மீனாட்சி மில்லுக்கு அருகிலேயும் மேம்பாலம் கட்டுவதற்கு ரயில்வே இலாக்கா தயாராய் இருப்பதாகவும், அந்தச் சாலையைப் போடுவதற்கு மாநில அரசு தயாராய் இருந்தால் பாலத்தின் கட்டுக் கோப்பை கட்டுவதற்கு நாங்கள் தயாராய் இருக்கிறோம் என்று திரும்பத் திரும்ப அவர்கள் சொல்லுகிறார்கள். அதை மதுரை வரி செலுத்துவோர் சங்கத்திலிருந்து மனுக்கள் அனுப்பி இருக்கிறார்கள். மேலும் இதனால் உற்பத்திக்கு இடைஞ்சல் ஏற்படுகின்ற காரணத்தினால் அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ரயில்வே கேட்டு அமைப்பது சுலபம். ஆனால் அதற்கான சாலைகளைப் போடுவதற்காகும் செலவுதான் அதிகம். சுப்பிரமணியபுரத்திற்கு அருகேயும், மீனாட்சி மில்லுக்கு அருகேயும் உள்ள மேம்பாலங்களுக்கு 7 திட்டங்கள் தீட்டப்பட்டு 88 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் செலவிலே பாதியை மத்திய சர்க்காரும், பாதியை நாமும் ஏற்றுக்கொள்ளலாம். அப்படிச் செய்வதற்கு மத்திய சர்க்கார் தயாராய் இருந்தால் நாமும் தயாராய் இருக்கிறோம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் திருநெல்வேலிக்கூடலில் வருகின்ற நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் 35 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அங்கு 'கேட்டடைத்தான்' என்று சொல்லப்படுவது கேட்காமலேயே அடைத்தான் என்ற நிலைதான் இருக்கிறது. ஆகையால் அந்த நிலைமையை மாற்றுவதற்கு நமது அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 35 இலட்சம் ரூபாய்க்கு திட்டம் தீட்டப்பட்டு அதற்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதை விரைவிலே நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

Dr. H. V. HANDE : Sir, this problem of level-crossing and the provision of overbridges over such level-crossings have been considered in Tamilnad for a long time in the past. The provision of overbridges has been a long-standing requirement in Tamilnad. But, the real difficulty has all along been the financial implications. Will this Government consider the possibility of collecting money, some fee, after construction of these overbridges, from the car-owners who use such overbridges ? This is being done in respect of a culvert constructed in Panruty. The car-owners are asked to pay a rupee or so for the whole day for using the culvert. I am sure this is a practical proposition and the car-owners, after all, will not grumble to pay this small amount. Will the Government re-examine this proposal and come forward to use the funds so collected for meeting the cost of putting up the approach roads ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி வசூலிப்பது பாலங்கள் கட்டுகின்ற இடத்திலே பல தொல்லைகள் ஏற்படுவதாக இருக்கும். இதைக் கூட பெரிய கார்கள் வைத்திருப்பவர்களிடத்திலேதான் வசூலிக்க வேண்டியிருக்கும். ஏழை மக்கள் உபயோகிக்கும் வாகனங்களுக்கு வசூலித்தால் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ரயில்வே மேம்பாலங்களைப் பொறுத்தவரையில், கனம் உறுப்பினர் சொன்ன கருத்தை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள யோசிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவை நகரத்திலே மிக முக்கியமான பாதையாகிய அவனாசி பாதையில் உள்ள ரயில்வே கேட்டும், வட கோவையில் உள்ள கேட்டும் அடிக்கடி அடைக்கப்பட்டு விடுவதால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக, தொழிற்சாலைக்குச் செல்லும் தொழிலாளர்களும், கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர்களும், அலுவலகங்களுக்குச் செல்லும் அரசாங்க அலுவலர்களும் பாதையில் நிறுத்திவைக்கப்பட்டு, பதினைந்து இருபது நிமிடங்கள் காலதாமதம் ஆகின்றது. இதனால் அவர்கள் மிகுந்த சிரமம் அடைகின்றார்கள். தமிழக அரசு சிபாரிசு செய்துள்ள திட்டங்களில் கோவை நகரத்திற்கு முதலிடம் தந்து, இந்தத் திட்டத்தை முதலில் நிறைவேற்றித் தருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே இந்தப் பட்டியல் வரிசைப்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தினால் இப்பொழுது அந்த வரிசை முறையை மாற்ற இயலாது. திடீரென்று கோவை நகரத்திற்கு முதன்மை இடம் என்று மாற்றினால் அதனால் பல தகராறுகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Bridges

***131 *Q.*—Thiru A. CHIDAMBARANATHA NADAR :** Will the Hon. the Minister for Public Works be pleased to state —

(*a*) the present condition of the small bridge at Kazhimar in Colachel–Karungal road across Pampuri–Vaikkal ;

(*b*) whether there is any proposal to widen this narrow culvert; and

(*c*) if so, when the work will be started ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) பாலம் நல்ல நிலையில் இருப்பதாகத் தெரிய வருகிறது.

(இ) பாலத்தை அகலப்படுத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.